4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 31/2012 நாள்: 01.09.2025 பி.வா.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் : சோமசுந்தரம் | | தொழில் : விவசாயம் | |
| த/பெ : கிட்டுசாமி கவுண்டர் | | கிராமம் : காங்கேயம் | |
| வயது : 65 | | தாலுகா : காங்கேயம் | |
| | | மாவட்டம் : திருப்பூர் | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

முதல் விசாரணை -

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 3வது சாட்சியாவேன். நான் பாப்பினி கிராமத்தில், நாட்டார்பாளையத்தில் வசித்து வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. எனக்கு 2ம் பிரதிவாதியின் மகன் 4ம் பிரதிவாதி ஜெயக்குமார் என்பவர் அழைப்பாணை என்னிடம் சார்பு செய்தார். லட்சுமியம்மாள் என்பவர் அவர் பேரன் ஜெயக்குமார், அருண் ஆகியோர்களுக்கு அதாவது 4, 5 பிரதிவாதிகளுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்தார், அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி உயில் ஆவணத்தை 9 ம் மாதம் 2009 ம் வருடம் எழுதினார். 2011 ம் வருடம் லட்சுமியம்மாளின் சின்ன மகன் 2ம் பிரதிவாதி ஆனந்த முருகன் பெயருக்கு மேற்படி லட்சுமியம்மாள் செட்டில்மெண்ட் ஆவணம் ஒன்று எழுதி வைத்தார். மேற்படி வருடமன்றே மேற்படி லட்சுமியம்மாள் அவருடைய மூத்தமகன் 1ம் பிரதிவாதி ஜோதி சுப்பிரமணியன் மற்றும் இளைய மகன் ஆனந்த முருகன் 2ம்

பிரதிவாதி ஆகியோர்கள் பெயருக்கு உடுமலைபேட்டை வீட்டை பொறுத்து உயில் ஆவணம் எழுதி வைத்தார். மேற்படி 3 ஆவணங்களிலும் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். 2009 ம் வருடம் எழுதிய உயில் ஆவணம் காங்கேயத்தில் உள்ள பத்திர எழுத்தர் துரைசாமி அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. மேற்படி உயில் ஆவணத்தில் மணிகண்டன் என்பவர் என்னுடன் சாட்சி கையொப்பம் போட்டார். மேற்படி உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட லட்சுமியம்மாள் தான் என்னை அழைத்தார். மேற்படி உயில் ஆவணம் ஏற்படுத்துவதற்கு 4 நாட்களுக்கு முன்பு நான் லட்சுமியம்மாள் வீட்டிற்கு சென்ற போது என்னை சாட்சி கையொப்பம் போட அழைத்தார். மேற்படி உயில் எழுதிய கிழமை திங்கள் கிழமை. என்னை துரைசாமி பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு காலை 9 மணிக்கு வருமாறு லட்சுமியம்மாள் அழைத்தார். நான் மேற்படி உயில் எழுதிய தேதியன்று மேற்படி பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு மணிகண்டன் இருந்தார். அன்றைய தினம் ஒரு ஆட்டோவில் லட்சுமியம்மாள் மேற்படி பத்திர அலுவலகத்திற்கு வந்தார். மேற்படி பத்திர அலுவலகத்திற்கு வந்து தன் பேரன்கள் 4 , 5 பிரதிவாதிகள் பெயருக்கு பஸ் கம்பெனி பங்கை உயில் எழுதி வைக்க வேண்டும் என்று சொன்னார். பத்திர எழுத்தர் முகவரி மற்றும் சொத்து பற்றிய விவரங்களை கேட்டார் லட்சுமியம்மாள் சொன்னார். பின்னிட்டு பத்திர எழுத்தர் ஒரு வெள்ளை பேப்பரில் தட்டச்சு செய்து கொண்டு வந்து லட்சுமியம்மாளிடம் கொடுத்தார். லட்சுமியம்மாள் அதை படித்து பார்த்துவிட்டு ஏற்கனவே எழுதிய உயிலை ரத்து செய்வதாகவும் எழுத வேண்டும் என்று சொன்னார். பின்பு ரத்து செய்த விவரத்தையும் பத்திர எழுத்தர் எழுதி லட்சுமியம்மாளிடம் வெள்ளை பேப்பரில் கொடுத்தார். பின்னிட்டு லட்சுமியம்மாள் அதை படித்து பார்த்துவிட்டு, எங்களை படிக்க கொடுத்தார், நாங்களும் படித்து பார்த்தோம். பின்னிட்டு லட்சுமியம்மாள் முத்திரை தாளில் எழுதி தருமாறு பத்திர எழுத்தரிடம் சொன்னார். பின்னிட்டு பத்திர எழுத்தர் அதை முத்திரை தாளில் தட்டச்சு செய்து லட்சுமியம்மாளிடம் கொடுத்தார்.

லட்சுமியம்மாள் படித்து பார்த்து விட்டு சரியாக இருப்பதாக சொன்னார். எங்களையும் படித்து பார்க்க லட்சுமியம்மாள் சொன்னார், நாங்களும் படித்து பார்த்தோம். பின் லட்சுமியம்மாள் முத்திரை தாளில் கையொப்பம் போட்டார். 9 தாளில் கையொப்பம் போட்டார். பின்பு எங்களை லட்சுமியம்மாள் சாட்சி கையொப்பம் போட சொன்னார். மணிகண்டன் முதலிலும், நான் பின்னிட்டும் சாட்சி கையொப்பம் போட்டோம். பின்னிட்டு பத்திர எழுத்தர் துரைசாமி கையொப்பம் போட்டார். பின்னிட்டு மேற்படி உயிலை பதிவு செய்ய வேண்டும் என்று லட்சுமியம்மாள் சொன்னதன் அடிப்படையில் நாங்கள் பத்திர பதிவு அலுவலகத்திற்கு காலை 10 மணிக்கு சென்றோம். லட்சுமியம்மாள் பதிவாளரிடம் உயிலை பதிவு செய்ய வேண்டும் என்று கொடுத்தார். பதிவாளர் உயிலை படித்து பார்த்தார். பதிவாளர் மேற்படி ஆவணத்தை எழுத நிர்பந்தம் உள்ளதா, நீங்களாகவே எழுதுகீறீர்களா என்று லட்சுமியம்மாளிடம் கேட்டார். லட்சுமியம்மாள் சுயமாக விருப்பப்பட்டு எழுதுவதாகவும், யாருடைய தூண்டுதலும் இல்லை என்று சொன்னார். சார் பதிவாளர் பக்கத்தில் இருக்கும் அலுவலரை அழைத்து உயிலை பதிவு செய்யுமாறு சொன்னார். மேற்படி அலுவலர் வாக்காளர் அடையாள அட்டையும், புகைப்படத்தையும் லட்சுமியம்மாளிடம் கேட்டார்கள். லட்சுமியம்மாள் அதை கொடுத்தார். லட்சுமியம்மாளின் புகைப்படத்தை முத்திரை தாளில் ஒட்டினார்கள். இரண்டு கையொப்பத்தை மேற்படி அலுவலகத்தில் கேட்டுக்கொண்டதற்கிணங்க லட்சுமியம்மாள் மேற்படி ஆவணத்தில் போட்டார். இரண்டு ரேகையும் மேற்படி ஆவணத்தில் வைத்தார். பதிவு செய்வதற்கு கட்டணத்தையும் லட்சுமியம்மாள் கொடுத்தார். எங்களை அடையாள காட்டும் சாட்சியாக போடுமாறு அலுவலகத்தில் கேட்டுக்கொண்டதற்கிணங்க நாங்கள் கையொப்பமிட்டோம். மேற்படி லட்சுமியம்மாள் உயில் ஆவணம் ஏற்படுத்திய விவரத்தை யாரிடமும் சொல்லவேண்டாம் என்று எங்களிடம் சொன்னார். எங்களுடைய குழந்தைகளிடம் நான் சொல்லிக்கொள்வதாக சொன்னார். என்னிடம் காட்டப்படும் 14.09.2009 தேதியிட்ட உயில் ஆவணம் காங்கேயத்தில்

வைத்து லட்சுமியம்மாள் ஏற்படுத்திய உயில் ஆவணம் தான். மேற்படி உயில் ஆவணம் பி.சா.ஆ.31 ஆகும். மேற்படி உயில் ஆவணத்தில் ஒவ்வொரு பத்தில் உள்ள கையொப்பமும் லட்சுமியம்மாள் கையொப்பம் தான். மேற்படி ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் மேற்படி ஆவணத்தில் உள்ள கைரேகை, புகைப்படம் லட்சுமியம்மாளுடையது தான். மேற்படி உயில் ஆவணம் பதிவு செய்யும் போது காலை 11 மணியிருக்கும். 2011 ம் வருடம் ஏற்படுத்திய செட்டில்மெண்ட் மற்றும் உயில் ஆவணம் மேற்படி பத்திர எழுத்தர் காங்கேயம் துரைசாமி அலுவலகத்தில் வைத்து தான் எழுதப்பட்டது. மேற்படி செட்டில்மெண்ட் மற்றும் உயில் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். அதில் என்னுடன் கணேசன் என்பவர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார். மேற்படி உயில் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணத்திலும் சாட்சி கையொப்பம் போட லட்சுமியம்மாள் தான் என்னை அழைத்தார். மேற்படி செட்டில்மெண்ட் மற்றும் உயில் ஆவணத்தை எழுத வெள்ளிக்கிழமையன்று பத்திர எழுத்தர் துரைசாமி அலுவலகத்திற்கு வரவேண்டும் என்று என்னை லட்சுமியம்மாள் அழைத்தார். நான் மதியம் 1 மணிக்கு வெள்ளிக்கிழமை துரைசாமி அலுவலகத்திற்கு சென்றேன். நான் செல்லும்போது அலுவலகத்தில் கணேசன் இருந்தார், பின்னிட்டு லட்சுமியம்மாள் பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு ஆட்டோவில் வந்தார். மேற்படி லட்சுமியம்மாள் பத்திர எழுத்தரிடம் காங்கேயம் வீட்டை சின்ன மகன் ஆனந்த முருகனுக்கும், உடுமலைபேட்டை வீட்டை இரு மகன்கள் பெயருக்கும் உயில் ஆவணம் மூலம் எழுதி வைக்க வேண்டும் என்று சொன்னார். மேற்படி ஆவணம் தயாரிப்பதற்கு விவரங்களை எல்லாம் லட்சுமியம்மாள் பத்திர எழுத்தரிடம் கொடுத்தார். பத்திர எழுத்தர் தட்டச்சு செய்து லட்சுமியம்மாளிடம் கொடுத்தார். மேலும் பத்திர எழுத்தரிடம் மேற்படி லட்சுமியம்மாள் சொத்து விவரம் பற்றி சொல்லும் போது ஏற்கனவே எழுதிய உயிலை ரத்து செய்வதாக எழுத வேண்டும் என்று சொன்னார். பத்திர எழுத்தர்

வெள்ளை பேப்பரில் தட்டச்சு செய்து கொண்டு வந்த பேப்பரை லட்சுமியம்மாள் படித்து பார்த்தார். அதை ஒரு முத்திரை தாளில் அடித்து தர வேண்டும் என்று லட்சுமியம்மாள் பையில் இருந்த முத்திரை தாளை எடுத்து பத்திர எழுத்தரிடம் கொடுத்தார். செட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதற்கு 9 முத்திரை தாளும், உயில் எழுதுவதற்கு 7 முத்திரை தாளும் லட்சுமியம்மாள் பத்திர எழுத்தரிடம் கொடுத்தார். ஒரு பத்திரத்தில் லட்சுமியம்மாளின் சின்ன மகனுக்கு செட்டில்மெண்ட் ஆவணமும், மற்றொரு பத்திரத்தில் இரு மகன்களுக்கும் உயில் ஆவணமும் எழுத சொன்னார். முத்திரை தாளில் இரண்டு பத்திரங்களை தயார் செய்து பத்திர எழுத்தர் லட்சுமியம்மாளிடம் கொடுத்தார், அதை அவர் படித்து பார்த்தார். எங்களையும் படித்து பார்க்க கொடுத்தார். பின்பு லட்சுமியம்மாள் இரு ஆவணங்களிலும் எங்கள் முன்னிலையில் கையொப்பம் போட்டார். அதன் பிறகு சாட்சிகள் இருவராகிய எங்களையும் கையொப்பம் போட சொன்னார், நாங்களும் கையொப்பம் போட்டோம். பின்பு பத்திர எழுத்தரிடம் பதிவு செய்ய லட்சுமியம்மாள் சொன்னார். பின்பு நாங்கள் அனைவரும் பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை 3 மணிக்கு சென்றோம். அதை பதிவு செய்வதற்கு லட்சுமியம்மாள் பதிவாளரிடம் கொடுத்தார். பதிவாளர் பதிவு செய்வதற்கு முன்பாக மேற்படி ஆவணங்களை எழுத நிர்பந்தம் உள்ளதா என்று கேட்டார், லட்சுமியம்மாள் சுயமாக எழுதுவதாக பதில் சொன்னார். பதிவாளர் பதிவு செய்ய அவர் கீழ் பணிபுரியும் அலுவலரை பதிவு செய்ய உத்தரவிட்டார். பின்பு அடையாள அட்டை இருக்கிறதா என்று கேட்டார், லட்சுமியம்மாள் வாக்காளர் அடையாள அட்டையும், புகைப்படத்தையும் மேற்படி அலுவலரிடம் கொடுத்தார். பதிவு கட்டணத்தை மேற்படி அலுவலர் கேட்டார், லட்சுமியம்மாள் கொடுத்தார். பின்பு புகைப்படத்தை முத்திரை தாளில் ஒட்டி இரண்டு இடத்தில் விரல் பதிவும், இரண்டு கையொப்பமும் பெற்றார்கள். அடையாளம் காட்டும் சாட்சியாக எங்களை மேற்படி அலுவலர் கையெழுத்து போடுமாறு சொன்னதன் அடிப்படையில் நானும், கணேசனும் கையொப்பம் போட்டோம். அதன் பிறகு மேற்படி

ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டன. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணம் லட்சுமியம்மாளால் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் தான், அதிலுள்ள கையொப்பமும் லட்சுமியம்மாள் உடையது தான். மேற்படி ஆவணத்தில் முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணம் 2011 ம் ஆண்டு லட்சுமியம்மாளால் ஏற்படுத்தப்பட்டது தான். மேற்படி உயில் ஆவணம் பி.சா.ஆ.32 ஆகும். மேற்படி உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் லட்சுமியம்மாள் உடையது தான். மேற்படி உயில் ஆவணத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள புகைப்படம் மற்றும் விரல்ரேகை லட்சுமியம்மாள் உடையது. 4 மணிக்கு மேற்படி ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டன. மேற்படி உயில் ஆவணத்தை பற்றி வெளியே சொல்லக்கூடாது லட்சுமியம்மாள் எங்களிடம் கேட்டுக்கொண்டார். மேற்படி ஆவணங்களை பற்றி அவரே குழந்தைகளிடம் சொல்லிக்கொள்வதாக சொன்னார். செட்டில்மெண்ட் ஆவணத்தை அன்றைய தினமே இளைய மகனிடம் கொடுத்துவிடுவதாக எங்களிடம் சொன்னார். எதற்காக ஒரு சொத்துக்கு உயில் ஆவணமும், ஒரு சொத்துக்கு செட்டில்மெண்ட் ஆவணமும் எழுதுகீறீர்கள் என்று நான் கேட்டேன் அதற்கு லட்சுமியம்மாள் முதல் மகன் ஏற்கனவே வாங்கி வைத்த வீட்டை விற்பனை செய்துவிட்டதாகவும், அவருடைய மகன் மற்றும் மகள்களுக்கு ஏற்கனவே திருமணம் நல்ல முறையில் செய்துவைத்து விட்டதாகவும், இளைய மகனுக்கு ஒன்றும் செய்யவில்லை என்ற காரணத்தினால் காங்கேயத்தில் உள்ள வீட்டை செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி வைத்ததாக சொன்னார். உடுமலைபேட்டை வீட்டை தன் ஆயுள் காலத்திற்கு பின்பு இருவரும் அனுபவித்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார். பெண் மக்களுக்கு நல்ல முறையில் சீர்வரிசைகள் செய்துவிட்டதாகவும் சொன்னார். தற்போதும் பெண் மக்களுக்கு சீர்வரிசை செய்து வருவதாக சொன்னார். மேற்படி லட்சுமியம்மாள் மேற்படி ஆவணங்கள்

தவிர மேற்படி லட்சுமியம்மாளும், அவருடைய மருமகன் ராமகோவிந்தன் என்பவரும் பஸ் கம்பெனியை பாகம் பிரித்து கொள்வது சம்பந்தமாக ஒரு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார், அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். மேற்படி விடுதலை பத்திரம் என்னிடம் காட்டப்படுவதுதான். அது பி.சா.ஆ.12 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். மேற்படி விடுதலை பத்திரத்தின் படி ராமகோவிந்தனுக்கு ரூ.3 லட்சம் கொடுத்து பேருந்து கம்பெனியிலிருந்து ராமகோவிந்தனை விலக்கிவிட்டார்கள். அதே தேதியன்று உடுமலைபேட்டை வந்து 50 விழுக்காடு லட்சுமியம்மாளுக்கும், தலா 25 விழுக்காடு அவருடைய இரண்டு மகன்களுக்கும் பங்கு உள்ளவாறு ஒரு பேருந்து கம்பெனியை கூட்டாக ஏற்படுத்தும் வகையில் ஒரு கூட்டு பத்திரம் எழுதினார்கள். அதில் நான் 1வது சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.13 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. லட்சுமியம்மாள் 2011 ம் வருடம் 10 ம் மாதம் காலமானார். மேற்படி லட்சுமியம்மாளை உடுமலைபேட்டையில் அவர் கணவர் அடக்கம் செய்த இடத்திலேயே அடக்கம் செய்து விட்டார்கள். லட்சுமியம்மாள் காங்கேயத்தில் உள்ள வீட்டில் வைத்து காலமானார். நான் அவருடைய இறப்பிற்கு சென்றிருந்தேன். 3ம் நாள் காரியத்திற்கும் நான் சென்றேன். நான் மேற்படி 3வது நாள் லட்சுமியம்மாள் உயில் ஆவணம் எழுதி வைத்த விவரத்தை அவருடைய குடும்பத்தாரிடம் சொன்னேன். லட்சுமியம்மாளின் கணவர் பொன்னுசாமி பொன்பரப்பியை சேர்ந்தவர். அது எனக்கு பக்கத்து கிராமம். எனக்கும் லட்சுமியம்மாளுக்கும் பண வரவு செலவு உண்டு. லட்சுமியம்மாளுக்கு UTERUS ல் ஒரு ஆபரேசனும், மார்பில் ஒரு ஆபரேசனும் செய்யப்பட்டிருந்தது. கடைசி காலத்தில் அவர் நல்ல விதமாக தான் இருந்தார். லட்சுமியம்மாள் அவருடைய நிறுவன நிர்வாகத்தை அவராகவே கவனித்து வந்தார். பேருந்திலும், காரிலும் உடுமலைபேட்டைக்கும் காங்கேயத்திற்கும் வருவார். எனக்கு விவசாயம் மற்றும் தேங்காய் வியாபாரம்

**தொழில். 20 ஏக்கர் விவசாய நிலமுள்ளது.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/−M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.